**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22–ஆம் தேதி திங்கட்கிழமை**

**EA No.5/2026 in EP No.25/2023 in OS No.87/2015**

1. சேகர் (இறப்பு)
2. வெண்ணிலா
3. சாமிலி
4. பாலகுமார்
5. மோகனா . . . மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**/எதிர்/**

1. செல்வம் (இறப்பு)
2. மாலதி
3. திவ்யா
4. தீபன்
5. சிலம்பரசன்
6. வெற்றிவேல . . . எதிர்மனுதாரர்கள்/ மனுதாரர்கள்/ வாதிகள்

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் இம்மனு பிரிவு 151 சிபிசி–ன் படி, நிறைவேற்று மனுவில் மனுதாரர்கள் தரப்பில் முடிக்கப்பட்ட வாதுரையை மறுதிறவு செய்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 06.04.2026 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 11.06.2026 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 22.06.2026 |
| மனுதாரர்களுக்காக | : | திரு.T.பக்ருதீன் – வழக்கறிஞர் |
| எதிர்மனுதாரர்களுக்காக | : | திரு.T.இரத்தினம் – வழக்கறிஞர் |

**1) மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர்கள் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்கள். நிறைவேற்று மனுவில் மனுதாரர் தரப்பு வாதத்திற்காக கடந்த 16.02.2026–ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டிருந்த சமயத்தில், மனுதாரருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுவிட்டதாலும், ஏனைய எதிர்மனுதாரர்கள் வெளியூரில் தங்கி வேலை பார்த்து வருவதாலும், வழக்கறிஞரை நேரில் சந்தித்து வழக்கு பற்றிய விவரங்களை எடுத்துக்கூற இயலாமல் போய்விட, மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்படாமலேயே தீர்ப்புக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே, நிறைவேற்று மனுவை மறுதிறவு செய்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) இரண்டாவது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, மூன்று முதல் ஆறு எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர்களின் மனு சரியல்ல. மனுதாரர்கள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. மனுதாரர்கள் வேண்டுமென்றே காலம் கடத்துவதற்காக லோக்அதாலத்துக்கு அனுப்பி, அங்கு ஆஜராகாமல் இருந்து விட்டு, அதன்பிறகு மூன்று வாய்தா மாற்றப்பட்டு, வெளியூர் சென்று விட்டதாக கூறியுள்ளது சரியல்ல. ஏற்கனவே மறுதிறவு மனு தொடர்ந்த Cost போட்டு மனு அனுமதிக்கப்பட்டு, மறுபடி விசாரணைக்கு போடப்பட்டிருந்தது. மீண்டும் மனுதாரர்கள் ஆஜராகாததால் எதிர்மனுதாரர்கள் வாதுரையை கேட்டு, உத்தரவுக்கு போடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனு கொடுத்து Cost கட்டாமல் மனு தள்ளுபடியாகவிட்டது. நிறைவேற்று மனுவில் பணம் செலுத்தாமல் காலம் கடத்தவே இம்மனு தொடரப்பட்டுள்ளதால், மனுதாரர்களின் மனுவினை எதிர்மனுதாரர்கள் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4) **தீர்வு :–**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்கள். நிறைவேற்று மனுவில் மனுதாரர் தரப்பு வாதத்திற்காக கடந்த 16.02.2026–ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டிருந்த சமயத்தில், மனுதாரருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுவிட்டதாலும், ஏனைய எதிர்மனுதாரர்கள் வெளியூரில் தங்கி வேலை பார்த்து வருவதாலும், வழக்கறிஞரை நேரில் சந்தித்து வழக்கு பற்றிய விவரங்களை எடுத்துக்கூற இயலாமல் போய்விட, மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்படாமலேயே தீர்ப்புக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே, நிறைவேற்று மனுவை மறுதிறவு செய்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவை ஆட்சேபனை செய்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும், நம்பத்தகுந்தவையாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்பட போவதில்லை. இருப்பினும், இம்மனுவானது காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இம்மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

5) **முடிவாக,** இம்மனுவின் மனுதாரர்கள், மனு செலவுத்தொகையாக ரூ.1,000/–ஐ (ரூபாய் ஆயிரம் மட்டும்) எதிர்மனுதாரர்களுக்கு வருகின்ற 13.07.2026–ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது. **அழைக்க வாய்தா : 14.07.2026**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 22–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.06.22 17:32:28 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.06.22 17:32:33 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.